**வாரப்பாடசாலை செயற்பாட்டுப் பத்திரம்**

**தரம்-13**

01. **குகப்படலத்தில்** பரதனது படை கங்கைக்கரையை அடைந்தது முதல் பரதன் மேல் சீற்றம் கொண்ட குகன் படை திரட்டியது வரையுள்ள பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
    அ. பரதனுடன் வந்த சேனையின் தோற்றம்
    ஆ. அச்சேனையினைக் கண்ட குகனின் சீற்றம்
    இ. அவன் வீரத்தோடு போருக்குத் தயாரானமை
    ஈ. பயின்றுள்ள அணிகளின் சிறப்பு

02. பாரதியார் ''**பெண்விடுதலை**'' எனும் பாடலில்
    அ. பெண்கள் அடிமைகள் ஆக்கப்பட்டமைக்கான காரணங்கள்
    ஆ. பெண்விடுதலைப் பற்றிய சிந்தனைகள்
    இ. பெண்விடுதலையில் ஆண்களின் பங்கு என்பன புலப்படுமாற்றை விளக்குக.

**03. ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது** என்ற நாவலில்
    அ. கிராமத்து மக்களின் ஏழ்மையும் உழைப்பும்
    ஆ. பெண்களது கல்வி முன்னேற்றத்தில் ஆசிரியர் கொண்ட அக்கறை
    இ. கிராமத்தை விழிப்படையச்செய்வதில் ஆசிரியர் கொண்ட ஆர்வம் என்பன வெளிப்படுத்தப்படுமாற்றை விபரிக்குக.

**04. அறிவுடைமை** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர்
    அ. அறிவினது சிறப்பு
    ஆ. அறிவினது இலக்கணம்
    இ. அறிவுடையாரது சிறப்பும் இல்லாரது அழிவும் பற்றி கூறியுள்ளவாற்றை விளக்குக.